ஒசூரில் பாஜக தேசியக் கொடி பேரணி: மத்திய அமைச்சர் சோமன்னா பங்கேற்பு



ஒசூரில் ராம் நகரில் நடைபெற்ற பாஜக பொதுக் கூட்டத்தில் பங்கேற்றோர்.

ஒசூர், நவ. 3: கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் பாஜக சார்பில் ஜன நாயகம் காப்போம், அராஜகத்தை அகற்றுவோம் என்ற முழக்கத்தை முன்வைத்து தேசியக் கொடி பேரணி மற்றும் பொதுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் மத்திய அமைச்சர் சோமன்னா பங்கேற்றார்.

ஒசூர் ராயக்கோட்டை சாலையில் உள்ள மின்வாரிய அலுவலகம் முன் இந்த பேரணி தொடங்கியது. மத்திய ரயில் துறை இணை அமைச்சர் வி.சோமன்னா தேசியக் கொடியை அசைத்து பேரணியைத் தொடங்கிவைத்தார்.

தமிழ்நாடு - புதுச்சேரி மாநிலங்களுக்கான பாஜக மேலிடப் பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா, மாநிலத் துணைத் தலைவர் கே.பி. ராமலிங்கம் மற்றும் கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர் ஆகிய 5 மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் தேசியக்கொடிகளை ஏந்தியபடி பேரணியில் பங்கேற்றனர்.

ராயக்கோட்டை சாலை, நேதாஜி சாலை மற்றும் பழைய பெங்களூர் சாலை வழியாக சென்ற பேரணி, ராம்நகரில் உள்ள அண்ணா சிலை அருகே அமைக்கப்பட்டிருந்த பொதுக்கூட்ட மேடையை அருகில் நிறைவடைந்தது.

பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மத்திய அமைச்சர் சோமன்னா பேசுகையில், ஜனநாயக முறையில் நடைபெறும் தேர்தல்களில் தோல்வியடையும்போது எஸ்.ஐ.ஆர் (வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்) மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மீது பழி போடுவதை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வழக்கமாகக் கொண்டுள்ளன. ஆனால், தாங்கள் வெற்றிபெறும் இடங்களில் இதையெல்லாம் இவர்கள் கூறுவதில்லை என்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில்,

பெங்களூர்- ஒசூர் இடையே மெட்ரோ ரயில் சேவையை விரிவாக்கம் செய்வது குறித்து பின்னர் விரிவாகப் பேசுகிறேன் என்றார்.

இதில் பாஜக தொழில் பிரிவு மாநிலத் தலைவர் பாலகிருஷ்ணன், மாநில துணைத் தலைவர் கே.எஸ். நரேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெண் குழந்தைகளின் விகிதம் அதிகரிப்பு

ஆட்சியர் ச.தினேஷ்குமார் தகவல்



பெண் குழந்தைகளுக்கான சிறப்பு கிராம சபையில் மாணவிகளுக்கு நோட்டு, புத்தகங்களை வழங்கிய ஆட்சியர் ச.தினேஷ்குமார்.

கிருஷ்ணகிரி, நவ. 3: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1000 ஆண் குழந்தைகளுக்கு, 1005 முதல் 1010 பெண் குழந்தைகள் என்ற அளவில் பாலின விகிதம் உயர்ந்துள்ளது என்று மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ்குமார் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஆலப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற பெயரில் சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமை வகித்து பேசியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு, 850 முதல் 870 பெண் குழந்தைகள் மட்டுமே பிறக்கும் நிலை இருந்தது. இதற்கு காரணமாக இருந்த பெண் சிசுக்கொலை, பாலினத் தேர்வு கருக்கலைப்புக்கு எதிராக மாவட்ட நிர்வாகம் மிகக் கடுமையான நடவடிக்கை மேற் கொண்டது. இதில் ஈடுபட்ட நபர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் காரணமாக தற்போது 1000 ஆண் குழந்தைகளுக்கு 1005 முதல் 1010 பெண் குழந்தைகள் என்ற அளவில் பாலின விகிதம் உயர்ந்துள்ளது.

இதன்மூலம் இம்மாவட்டம் மாநிலத்திலேயே அதிக பாலின விகிதம் கொண்ட மாவட்டங்களில் ஒன்றாக சிறப்பிடம் பெற்றுள்ளது.

மேலும், குடும்பச் சூழல் காரணமாகப் படிப்பை நிறுத்த வற்புறுத்தப்படும் அல்லது குழந்தைத் திருமண அபாயத்தை எதிர்கொள்ளும் மாணவிகள், தங்கள் பள்ளித் தலைமையாசிரியர் அல்லது ஆசிரியர்களை அணுக வேண்டும். மாவட்ட நிர்வாகம் உடனடியாக உரிய பாதுகாப்பு வழங்கும்.

ஏற்கெனவே இதுபோன்ற இடர்பாடுகளுக்கு உள்ளான 10-க்கும் மேற்பட்ட மாணவிகளை மாவட்ட நிர்வாகம் மீட்டு, அரசு விடுதிகளில் தங்கவைத்து அவர்களின் விருப்பப்படி உயர்கல்வி பயில ஏற்பாடு செய்துள்ளது.

மேலும், மாணவர்களை கல்வியில் கவனம் செலுத்தவிடாமல் தடுக்கும் மிகப்பெரிய சவாலாக ஸ்மார்ட்போன் மற்றும் டிஜிட்டல் அடிமைத்தனம் உருவாகியுள்ளது. இதைத் தவிர்க்க மாணவிகளுக்குத் தேவையான மனநல ஆலோசனைகள் வழங்கப்படுகிறது என்றார்.

தொடர்ந்து, சுகாதார விழிப்புணர்வு, வங்கி மோசடிகள் குறித்த விழிப்புணர்வு கண்காட்சியை ஆட்சியர் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வில் உதவி ஆணையர் (ஆயம்) பழனி, மாவட்ட சுகாதார அலுவலர் ஜெகநாதன், மாவட்டக் கல்வி அலுவலர் கௌசர், வட்டார மருத்துவ அலுவலர் இனியாள் மண்டோதரி, வட்டாட்சியர் ராஜலட்சுமி, காவல் உதவி ஆய்வாளர் (சைபர் க்ரைம்) கார்த்திகா, குழந்தைகள் நலக் குழுமத் தலைவர் பிரசன்ன குமாரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கோரிக்கைகளை வலியுறுத்தி கிராம செவிலியர்கள் ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, நவ. 3: கிருஷ்ணகிரியில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு கிராம, பகுதி நேர, சமுதாய, சுகாதார செவிலியர் கூட்டமைப்பினர் செவ் வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிருஷ்ணகிரி ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு அந்தக் கூட்டமைப்பின் தலைவர் தமிழரசி தலைமை வகித்தார். பொருளாளர் கண்ணகி, மாநில நிர்வாகி தமிழ்ச்செல்வி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

துணை சுகாதார நிலையத்திலிருந்து இடைநிலை சுகாதாரப் பணியாளர் பதவியை நீக்க வேண்டும். பாலின பாகுபாடற்ற பதவி உயர்வு நிலை -1 வழங்க வேண்டும். சமுதாய சுகாதார செவிலியருக்கு தாய்சேய் நல அலுவலர் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் முழக்கங்களை எழுப்பினர்.

தமிழ்நாடு கிராம வங்கி
TAMIL NADU GRAMA BANK
அரசுடமை வங்கி Scheduled Bank Owned by Government

ஒப்பந்ததாரர்கள் பட்டியல் சேர்ப்பு அறிவிப்பு

இந்தியன் வங்கியின் ஆதரவு பெற்ற தமிழ்நாடு கிராம வங்கி, தனது பல்வேறு கிளைகள் மற்றும் அலுவலகங்களில் உட்புற அலங்கார (Interior Furnishing) மற்றும் மின் பொறியியல் (Electrical Engineering) பணிகளை மேற்கொள்வதற்காக, தகுதியுள்ள நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது. கூடுதல் விவரங்களுக்கு, எங்கள் இணையதளத்தைப் பார்வையிடவும்: https://www.tngb.bank.in/tenders.
விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி : 1.00 PM on 02-12-2026
தொடர்புக்கு : தமிழ்நாடு கிராம வங்கி, தலைமை அலுவலகம், தெ.எ. ஏற்காடு ரோடு, அன்தம்பட்டி, சேலம் - 636007. Ph : 0427-2522211.
E-mail: ped@tngb.bank.in - பொது மேலாளர்

RELIGARE ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட்
(RELIGARE FINVEST LTD.)
CIN:U74999DL1995PLC064132
பதிவு அலுவலகம்: முதல் தளம், அலுவலக எண்.101, 2E/23, ஜாண்சன்வயன் வீதி, புதுதில்லி - 110055
கிளை அலுவலகம்: எண்.421/G, முதல் தளம், 1வது மெயின் ரோடு, 1வது ஸ்டேஜ், இந்திராநகர், கிருஷ்ணா கோயில் சாலை, SBI கிளை எதிரில், பெங்களூர்-560038

APPENDIX-IV-A [See proviso to Rule 8(6) & proviso to Rule 9(1)]
அசையா சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை நெருக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் 2002, பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அமலாக்க வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்.

ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் (கருக்கமாக 'RFL'), நிறுவனத்தில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **அடையாளபூர்மான கவாதீனத்தில் (Symbolic Possession)** எடுக்கப்பட்டு **கடன்தாரர்கள் / ஜாமீன்தார்கள் / அடமானதாரர்கள் 1)AVS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், 2) S.யுவராஜ், 3) S.சுந்தரையா, 4) சந்திரய்யா காண்ட்ராக்டர், 5) C.ஸ்வர்ணா** ஆகியோரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய கடன்தொகையான **02.11.2026** அன்றுள்ளபடி **₹10,67,13,477.18** (ருபாய் பத்து கோடியே அறுபத்து ஏழு லட்சத்து பதிமூன்றாயிரத்து நானூற்று எழுபத்து ஏழு மற்றும் பைசா பதினெட்டு மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" மற்றும் "புகார்கள் ஏற்கப்படமாட்டாது"** என்ற அடிப்படையில் இ-ஏலம் **"Online Electronic Bidding"** மூலம் **https://www.bankeauctions.com/** என்ற இணையதளத்தில் **02.12.2026** அன்று காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை ஒவ்வொரு 5 நிமிட கால இடைவெளியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தார்கள்/ஜாமீன்தார்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

அசையா சொத்துக்கள் விவரம்

ஐட்டம் எண்.1: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம் மற்றும் கெலமங்கலம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, **மகிகிரி கிராமம், ஒகூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்.**

i. சர்வே எண்.802/1, புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.45.0, தீர்வை ரூ.2.22np, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.802/1A1-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.08.0, தீர்வை ரூ.0.40np, மொத்த பரப்பு ஏக்கர் 0.20 சென்ட்.,

ii. சர்வே எண்.799/4-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.51.0, தீர்வை ரூ.2.52np, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண். 799/4B, புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.32.5, தீர்வை ரூ.1.61np, மொத்த பரப்பு ஏக்கர் 0.80 சென்ட் அதனுடன் இணைந்த மண்டுகளும் பகுதிகளும். மேலே உள்ள சொத்தானது குடியிருப்பு வீட்டு மனைகளாக மாற்றப்பட்டது. இதில்...

A.சர்வே எண்.802/1A1, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.802/1A1C-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 02.20, தீர்வை ரூ.0.11NP, **மனை எண்.2-**ல் உள்ள நிலத்தின் பரப்பு 2,398 சதுர அடி அல்லது 0.05½ சென்ட். அதனுடன் அனைத்து ரேராகுலின் பொது உரிமைகள் மற்றும் அதனுடன் **RCC கட்டிடத்தின் மொத்த பரப்பு 2,200 சதுர அடி அல்லது 205 சதுர மீட்டர்,** அதனுடன் அனைத்து கதவுகள், ஜன்னல்கள், மின்சார பொருத்துதலின் சேவை இணைப்பு எண்.070-009-1756, தண்ணீர் இணைப்புகள் பொருத்துதல்கள் மற்றும் இதர உதிரி பாகங்கள் போன்றவை.

B.சர்வே எண்.799/4B, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.799/4B3-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0-3.60, தீர்வை ரூ.0.18NP, **மனை எண்.5-ல் உள்ள நிலத்தின் பரப்பு 3,924 சதுர அடி அல்லது ஏக்கர் 0.09 சென்ட்.**

C.சர்வே எண்.799/4B, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.799/4B5-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0-2.00, தீர்வை ரூ.0.10NP, **மனை எண்.6A-ல் உள்ள நிலத்தின் பரப்பு 2,180 சதுர அடி அல்லது ஏக்கர் 0.05 சென்ட்.**

D.சர்வே எண்.799/4B, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.799/4B4-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0-1.60, தீர்வை ரூ.0.10NP, **மனை எண்.6B-ல் உள்ள நிலத்தின் பரப்பு 1,744 சதுர அடி அல்லது ஏக்கர் 0.04 சென்ட்.**

E.சர்வே எண்.799/4B, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.799/4B8-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0-3.60, தீர்வை ரூ.0.18NP, **மனை எண்.7-ல் உள்ள நிலத்தின் பரப்பு 3,924 சதுர அடி அல்லது ஏக்கர் 0.09 சென்ட்.**

F.சர்வே எண்.799/4B, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.799/4B9-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0-10.90, தீர்வை ரூ.0.54NP, **மனை எண்.8-ல் உள்ள நிலத்தின் பரப்பு 11,772 சதுர அடி அல்லது ஏக்கர் 0.27 சென்ட்.**

ஐட்டங்களின் மொத்த பரப்பு 25,942 சதுர அடி அல்லது ஏக்கர் 0.59½ சென்ட். எல்லைகள்: கிழக்கு: ரோடு மற்றும் விற்பனையாளருக்கு சொந்தமான ஓபந்தல் மனை எண்.42 மற்றும் தனியார் சொத்து, மேற்கு: சர்வே எண்கள்.799/2B, 799/2A & 799/1C-ல் உள்ள நிலம், வடக்கு: சர்வே எண்கள்.799/4B2 & 802/1A1B-ல் மற்றவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கு: சர்வே எண்கள்.800 & 802/2A-ல் தனியாருக்கு சொந்தமான நிலம். நிலத்தின் **மொத்த பரப்பு 25,942 சதுர அடி அல்லது ஏக்கர் 0.59½ சென்ட்** (இருபத்து ஐந்து லட்சத்து தொள்ளாயிரத்து நாற்பத்து இரண்டு சதுர அடி அல்லது ஐம்பத்து ஒன்பது மற்றும் பாதி சென்ட்)

ஐட்டம் எண்.2: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கெலமங்கலம் சார் பதிவு மாவட்டம் மற்றும் ஒகூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட, **மகிகிரி கிராமம், ஒகூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்,** சர்வே எண்.799/4-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.51.0, தீர்வை ரூ.2.52 NP (ஏக்கர் 1.26 சென்ட்) புதிய சப் டிவிஷன் சர்வே எண்.799/4-B-ல் மொத்தமுள்ள பரப்பு ஹெக்டேர் 0.32.5, தீர்வை ரூ.1.61 np, (ஏக்கர் 0.80 சென்ட்), இவை பல்வேறு வீட்டு மனைகள் கொண்ட லேஅவுட்டாக மாற்றப்பட்டு, இதில் **மனை எண்.4-ல் உள்ள நிலத்தின் பரப்பு 3924 சதுர அடி அல்லது ஏக்கர் 0.09 சென்ட்.** எல்லைகள்: கிழக்கு: 20 அடி பொது ரோடு, மேற்கு: சர்வே எண்.799/2B மற்றும் 799/2A, வடக்கு: மனை எண்.3, தெற்கு மனை எண்.5.

ஐட்டம் எண்.3: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கெலமங்கலம் சார் பதிவு மாவட்டம் மற்றும் ஒகூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட, **மகிகிரி கிராமம், ஒகூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்,** சர்வே எண்.802/1-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.45.0, தீர்வை ரூ.2.22 NP (ஏக்கர் 1.11 சென்ட்.) புதிய சப் டிவிஷன் சர்வே எண்.802/1A1-ல் மொத்தமுள்ள பரப்பு ஹெக்டேர் 0.08.0, தீர்வை ரூ.0.40 np, (ஏக்கர் 0.20 சென்ட்), இவை பல்வேறு வீட்டு மனைகள் கொண்ட லேஅவுட்டாக மாற்றப்பட்டு, இதில் **மனை எண்.1-ல் உள்ள நிலத்தின் பரப்பு 2398 சதுர அடி அதனுடன் RCC தளம் கொண்ட கட்டிடம்,** அதனுடன் மின்சார சேவை இணைப்பு எண்.080 070 1755. எல்லைகள்: கிழக்கு: 24 அடி பொது ரோடு, மேற்கு: 20 அடி தனியார் ரோடு, வடக்கு: அதே சர்வே எண்ணில் உள்ள மீதமுள்ள நிலம், தெற்கு மனை எண்.2 (தற்போது மேலே உள்ள நிலமானது பாகம் பிரிக்கப்பட்டு பட்டா எண்.4754-ன் கீழ் புதிய சப் டிவிஷன் சர்வே எண்.802/1A1B-ல் உள்ள பரப்பு 0.02.23)

ஐட்டம் எண்.4: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கெலமங்கலம் சார் பதிவு மாவட்டம் மற்றும் ஒகூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட, **மகிகிரி கிராமம், ஒகூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்,** சர்வே எண்.801/1-A-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.27.0, தீர்வை ரூ.3.20 NP (ஏக்கர் 0.67 சென்ட்.) புதிய சப் டிவிஷன் சர்வே எண்.801/1A1-ல் மொத்தமுள்ள பரப்பு ஹெக்டேர் 0.26.0, தீர்வை ரூ.1.28 np, (ஏக்கர் 0.64 சென்ட்.), சர்வே எண்.802/2-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.04.5, தீர்வை ரூ.0.05 np, (ஏக்கர் 0.11 சென்ட்.), புதிய சப் டிவிஷன் சர்வே எண்.802/2-B-ல் புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.01.0, தீர்வை ரூ.0.06 np, (ஏக்கர் 0.02 சென்ட்).

ஐட்டம் எண்கள்.1 மற்றும் 2-ன் மொத்த பரப்பு ஏக்கர் 0.66 சென்ட்., இவை பல்வேறு வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு **"மரநாத காவலி"** என பெயரிடப்பட்ட இந்த லேஅவுட்டானது நகர மற்றும் ஊரக திட்டமிடல் இயக்குனர், சேலம் அவர்களால் ஒப்புதல் வழக்கப்பட்டு அதன் ஒப்புதல் எண்.L.P.R. S.D.எண்.5/88. இதில் **மனை எண்.42-ல் உள்ள நிலத்தின் பரப்பு 3067 சதுர அடி.** எல்லைகள்: கிழக்கு: 24 அடி அகல ரோடு, மேற்கு: சர்வே எண்.799, வடக்கு: மனை எண்.43, தெற்கு மனை எண்.41.

ஐட்டம் எண்.5: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கெலமங்கலம் சார் பதிவு மாவட்டம் மற்றும் ஒகூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட, **மகிகிரி கிராமம், ஒகூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்,** சர்வே எண்.706/2A3-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.37.0, தீர்வை ரூ.1.02 np (ஏக்கர் 0.91 சென்ட்.) மொத்தமுள்ள பரப்பு ஏக்கர் 0.24 மற்றும் பாதி சென்ட். தீர்வை ரூ.0.28np. எல்லைகள்: கிழக்கு: சர்வே எண்.706/2A/4A/2A-ல் உள்ள மக்கமண ராவ்க்கு சொந்தமான நிலம், மேற்கு: அதே சர்வே எண்ணில் உள்ள நிலத்தின் பகுதி, வடக்கு: அதே சர்வே எண்ணில் உள்ள நிலத்தின் பகுதி, தெற்கு: சர்வே எண்.706/2B மற்றும் 706/2C (தற்போது மேல் உள்ள நிலத்தின் பகுதியின் புதிய சப் டிவிஷன் சர்வே எண்.706/2A3B-ல் உள்ள பரப்பு ஹெக்டேர் 0.20.0)

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 4,18,52,045/-
மற்றும் டேவணித்தொகை (EMD): ₹ 41,85,205/-

இ-ஏல தேதி & நேரம் : 02.12.2026
காலை 10.30 மணியிலிருந்து 11.30 மணி வரை
Portal of E-Auction: https://www.bankeauctions.com/

தெரிந்த வில்லங்கங்கள்
விற்பனை செய்யப்படவுள்ள ஈடுபெற்ற சொத்தின் மீதான எந்தவொரு வில்லங்கமும் RFL-க்கு தெரியாது. விருப்பமுள்ள விலைக்குறிப்பிட்டாளர்கள் சொத்து பற்றிய தனது சொந்த மதிப்பீட்டை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். கடன் வழங்கியவர் (RFL) மேற்குறிப்பிட்ட ஈடுபெற்ற சொத்தின் தகுதிக்கு எந்தவொரு உத்திரவாதமும் / பிரதிநிதித்துவமும் அளிக்கவில்லை. இந்தச் சொத்தானது, AVS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மற்றும் ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட, பிணையாக்கல் மனு எண் 517/2026-இல், மாண்புமிகு சென்னை கடன் மீட்புத் திற்பாயம்-II வழங்கும் திற்புக்கு உட்பட்டு, எவ்விதப் பாரபட்சமுமின்றி ஏலத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

விற்பனையின் பிற விபரங்கள்:
1. விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்:
https://uat-religarefinvests.webflow.io/auction-notices
2. இ-ஏலம் பற்றிய விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர் **M/s. C1 India Pvt. Ltd, Mr. தரணி கிருஷ்ணா – Tel. No.: +91 72919 71124/25/26** மற்றும் **Mobile +91-99481 82222; email id – andhra@c1india.com.**
3. விருப்பமுள்ள நபர்கள் விண்ணப்பம் / ஏலம் சமர்ப்பிக்கும் விபரங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி **Mr.அன்சர் B S, Mobile: 89290 24427** மற்றும் **Mr.R.மனோஜ்குமார் Mob: 99404 46070**

தேதி : 04.11.2026
இடம் : சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
M/s.ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட்

விலைவாசி உயர்வுக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம்



தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர்.

தருமபுரி/பென்னாகரம், நவ. 3: அத்தியாவசிப் பொருள்களின் விலை உயர்வுக்கு எதிராக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகே செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் ச.கலைச்செல்வம் தலைமை வகித்துப் பேசினார். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். மாநிலக் குழு உறுப்பினர்கள் சிவன், சிற்ற ரசு, புள்ளாறு ஆகியோர் பங்கேற்றனர்.

இதில், அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். பொதுவிநியோகத் திட்டத்தில் மளிகைப் பொருள்களை மலிவு விலையில் வழங்க வேண்டும். விலை ஏற்றத்தை தடுக்க மத்திய, மாநில அரசுகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

இதில், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் எம். நவீன்குமார், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் மணி, தலைவர் முருகன், மாவட்ட நிர்வாகி இ.பி.புகழேந்தி உள்பட திரளானோர் கலந்துகொண்டனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்: தமிழகத்தில் தொடர்ந்து உயர்ந்து வரும் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை கோரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் முன் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு, நகரச் செயலாளர் ஏ.ஜெயா தலைமை வகித்தார். மாவட்டச் செயற்குழு உறுப்பினர் சி.நாகராசன், ஒன்றியச் செயலாளர் கே.கோவிந்தசாமி, மாவட்டக் குழு உறுப்பினர்கள் டி.எஸ். ராமச்சந்திரன், என்.கந்தசாமி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

இதேபோல, நல்லம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, ஒன்றியச் செயலாளர் எஸ்.எஸ். சின்னராஜ் தலைமை வகித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் சோ.அருச்சுணன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் எஸ்.கிரைஸா மேரி, கே.எல்லப்பன் ஆகியோர் பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில், அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வை கட்டுத்த வேண்டும். பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு உருளை விலையை குறைக்க வேண்டும். பொதுவிநியோகத் திட்டத்தை பலப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

பாப்பாரப்பட்டியில்...

இதே கோரிக்கைகளை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பாப்பாரப்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்தின் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பகுதி குழு செயலாளர் சக்திவேல் தலைமை வகித்தார்.

மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே. விஸ்வநாதன் கண்டனம் தெரிவித்து பேசினார். அரிசி, பருப்பு, காய்கறி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும், பொதுவிநியோகத் துறையை பலப்படுத்தவேண்டும் என மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி கண்டன முழக்கங்களை எழுப்பினர். இதில் பகுதி குழு உறுப்பினர்கள் ராஜாமணி, சிலம்பரசன், கார்த்திக், மனோன்மணி, அஞ்சலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

கோரிக்கைகளை வலியுறுத்தி செவிலியர் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம்



கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சுகாதார செவிலியர்கள் கூட்டமைப்பினர்.

தருமபுரி, நவ. 3: தமிழ்நாடு அரசு கிராமப்புற, சமுதாய, சுகாதார செவிலியர் கூட்டமைப்பு சார்பில் தருமபுரி மாவட்ட ஆட்சியரகம் அருகே 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் காந்திமதி, மாவட்ட துணைச் செயலாளர் கௌரி ஆகியோர் தலைமை வகித்தனர். பொருளாளர் ருக்மணி, மாவட்டச் செயலாளர் ரிபேக்கா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

துணை சுகாதார நிலையத்திலிருந்து இடைநிலை சுகாதாரப் பணியாளரை அப்புறப்படுத்த வேண்டும், கிராம சுகாதார செவிலியர்கள் செய்யும் தாய், சேய் நலப்பணிகளை இடைநிலை சுகாதாரப் பணியாளர் செய்வதாக அறிக்கை அனுப்புவதை நிறுத்த வேண்டும்.

செய்யாத வேலைகளுக்காக சமூக ஊடங்களில் தொலைக்காட்சியில் பேட்டி அளிக்கும் இடைநிலைப் பணியாளரை நீக்கம் செய்ய வேண்டும். பாலின பாகுபாடற்ற வகையில் பதவி உயர்வு வழங்க வேண்டும். குறிப்பாக, சமுதாய சுகாதார செவிலியருக்கு தாய்- சேய் நல அலுவலராக பதவி உயர்வு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட ஒன்பது அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

பள்ள